# மத்திய மாகாண சபையின் விவசாய திணைக்களத்தில் நிலவும் அலுவலக தொழிலாளர்கள் தரம் III, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் அலுவலக தொழிலாளர்கள், மருந்தக தொழிலாளர், பரிசாரர் தரம் III என்பவற்றுக்காக ஆட்களை இணைத்துக்கொள்ளல்.-2018

மத்திய மாகாண விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் நிலவும் தொழிலாளர், மருந்தக தொழிலாளர், பரிசாரர் போன்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கின்றவர்களில் தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1 தகைமைகள் :-

1.1.கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதர ( சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

1.2 அனுபவம்

உரிய துறைத் தொடர்பான அனுபவத்தினைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும். அனுபவத்தினை சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அரச அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1.3.பயிற்சி

பதவிக்கான துறையில் அரச அங்கீகாரம் பெற்ற பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருப்பது அல்லது பயிற்சி பெற்றிருப்பது மே லதிக தகைமையாக கருதப்படும் (பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருப்பது சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

1.4. வேறு

1.4.1.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.4.2. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.4.3. விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2018-08-30) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும். (விண்ணப்பதாரரின் வதிவு வாக்காளர் இடாப்புப் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

1.4.4. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

.

1.4.5 பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகளை விண்ணப்ப திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்

1.5 வயது

1.5.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

2.. சம்பள அளவுத்திட்டம் :

பொது நிருவாக சுற்று நிரூபம் 03/2016 இன் PL 1-2016 சம்பளத் தொகுதிற்கமைய குறித்த பதவிக்கான மாதாந்தம் சம்பள அளவுத்திட்டம் கீழ்வருமாறு

ரூபா. 24250 - 10x250-10x270-10x300-12x330 = ரூபா. 36410/-ஆகும்

(உப அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய எதிர்காலத்தில் சம்பளங்கள் வழங்கப்படும்.)

3. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப்பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்

4. ஆட்சேர்ப்பு முறை:-

அரச நிருவாக சுற்று நிரூபம் மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

5.சேவையின் தன்மை

5.1 தொழிலாளர் - விவசாயத் திணைக்களம்

காரியாலயத்தின் உற்பகுதி மற்றும் வெளிப் பகுதியை சுத்தமாக்கும் பணி மற்றும் சுத்திகரிப்பு சேவைமேற் கொள்ளல், திணைக்கள வலாகத்தில் விவசாய நிலத்தில் விவசாய நடவடிக்கைகளைக் கவனித்தல் மற்றும் கால் நடை பராமரிப்பு , புல் நிலம் பராமரிப்பு, காரியாலயத்திற்கு கொண்டுவரும் கொண்டு செல்லும் பொருட்களை ஏற்றுதல் இறக்குதல், மற்றும் தேவைக்கு ஏற்ப நிறுவனத் தலைவரால் வழங்கப்பகின்ற பணிகளை நிறைவேற்றல்.

5.2. தொழிலாளர் - விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

காரியாலயத்தின் உற்பகுதி மற்றும் வெளிப் பகுதயை சுத்தமாக்கும் பணி மற்றும் சுத்திகரிப்பு சேவை மேற்கொள்ளல், திணைக்கள வலாகத்தில் விவசாய நிலதில் விவசாய நடவடிக்கைகளைக் கவணித்தல் மற்றும் கால் நடை பராமரிப்பு , புல் நிலம் பராமரிப்பு, காரியாலயத்திற்கு கொண்டுவரும் கொண்டு செல்லும் பொருட்களை ஏற்றுதல் இறக்குதல், மற்றும் தேவைக்கு ஏற்ப நிறுவனத் தலைவரால் வழங்கப்பகின்ற பணிகளை நிறைவேற்றல்

5.3. மருந்தக தொழிலாளர் - விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

காரியாலயத்தின் உற்பகுதி மற்றும் வெளிப் பகுதயை சுத்தமாக்கும் பணி மற்றும் சுத்திகரிப்பு சேவைமேற் கொள்ளல், சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தும் கருவிகளை கிருமி அகற்றல், மரண பரிசோதனையின் போதும் பின்னரும் வைத்தியருக்கு உதவுதல், இறந்த விலங்குகளையும் கழிவுகளையும் அப்புறமாக்கல், மருந்தகத்திலும் வெளிக்களத்திலும் நடாத்தப்படுகின்ற சத்திர சிகச்சைகளில் வைத்தியருக்கு உதவுதல், காரியாலயத்திற்கு கிடைக்கும் செயற்கைக் கருவூட்டல் கருவி மற்றும் கால்நடை விந்து என்பவற்றை பொறுப் பேற்று பாதுகாத்தல் தேவைக்கு ஏற்ப நிறுவனத் தலைவரால் வழங்கப்பகின்ற பணிகளை நிறைவேற்றல்

5.4. பரிசாரர் - விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தும் கருவிகளை கிருமி அகற்றல், மரண பரிசோதனையின் போதும் பின்னரும் வைத்தியருக்கு உதவுதல், இறந்த விலங்குகளையும் கழிவுகளையும் அப்புறமாக்கல், மருந்தகத்திலும் வெளிக்களத்திலும் நடாத்தப்படுகின்ற சத்திர சிகச்சைகளில் வைத்தியருக்கு உதவுதல் தேவைக்கு ஏற்ப நிறுவனத் தலைவரால் வழங்கப்பகின்ற பணிகளை நிறைவேற்றல்

6. விண்ணப்பிக்கும் முறை:-

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் **“செயலாளர், மத்திய மாகாண விவசாய அமைச்சு, இல 1060,கெடம்பே, பேராதெனிய ”** என்ற முகவரிக்கு 2018-08-30 ஆம் திகதிற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கையில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் . விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வ மைச்சு பொறுப்புக் கூற மாட்டா

7. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும்..

7.1 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர் , சமாதான நீதவான் , சத்தியப் பிரமாண ஆணையாளர் , சட்டத்தரணி , பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது அல்லது ரூபா 240,360/- இற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

7.2 நியமனம் வழங்க முன் , வழங்கிய பின் , அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

7.3 தற்போது அரச சேவையில் / மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண விவசாய அமைச்சின் செயலாளர்க்கு உறியதாகும்.

2018 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பீ எச் என் ஜயவிக்ரம
மத்திய மாகாண விவசாய அமைச்சு செயலாளர்
1060,கெடம்பே, பேராதெனிய மத்திய மாகாண விவசாய அமைச்சு

**மத்திய மாகாண சபையின் விவசாய திணைக்களத்தில் நிலவும் அலுவலக தொழிலாளர்கள் தரம் III, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் அலுவலக தொழிலாளர்கள், மருந்தக தொழிலாளர், பரிசாரர் தரம் III என்பவற்றுக்காக ஆட்களை இணைத்துக்கொள்ளல்.-2018**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………..……………………………………………

……………………………………………………………………….........(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர்: ………………..……………………………………………

……………………………………………………………………………….............(சிங்களத்தில்/ தமிழில்)

1.3 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : ………………..…………………………

……………………………………………………………………….........(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

1.4 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : ………………...…………………………

……………………………………………………………………………………(சிங்களத்தில்/ தமிழில்)

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ………………..………………………………………

……………………………………………………………………………………………………………..

2.2 தொலைபேசி இலக்கம் : ………………………………………………

03. 3.1 பிறந்த திகதி : …………………….…

3.2 விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2018-08-30) வயது :

வருடங்கள் : ........... மாதங்கள் : ......... நாட்கள் : .................

3.3 தேசிய ஆளடையாள அட்டை இல:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. பால் (ஆண், பெண்) : …………………………………..

05. நிரந்தர வதிவிடம்தொடர்பான தகவல்

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | **2015** | **2016** | **2017** | **2018.08.30 வரை** |
|---|---|---|---|---|
| தேர்தல் தொகுதி | | | | |
| வாக்காளர் பிரிவு | | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | | |
| வீட்டு இல. | | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | | |

06. கல்வித் தகைமைகள் : - க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் :

6.1 பரீட்சை ஆண்டு : …………………… பரீட்சை ஆண்டு : ……………………

6.2 சுட்டிலக்கம் : ………………………… சுட்டிலக்கம் : …………………………

6.3 பெறுபேறுகள் - முதலாம் தடவை பெறுபேறுகள் - இரண்டாம் தடவை

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.4 மேலதிக பெறுபேறு(.........................................................................................................

**பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும், இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையாக காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்திற்கு பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

……………………………………

திகதி : ……………………… பரீட்சார்த்தியின் கையொப்பம்

**07. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு. ....................................................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் அவர் இன்று என் முன்னிலையில் 2018.08........... ஆம் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

……………………………………………

திகதி : ……………………… அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ………………………………………

பதவி : ……………………………………………

முகவரி : ……………………………………………

(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

………………………………………………………………….

**அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு. ........................................................................ என்பவர் இந்த காரியாலயத்தில் பணிபுரிபவர் என்பதுடன் மேற்படி தகவல் காரியாலய கவையின் பிரகாரம் சரி எனவும் அவர் இன்று என் முன்னிலையில் ..................... ஆம் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................

திகதி : ...........................                                    நிறுவனத் தலைவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................................
பதவி : ..................................................
முகவரி : ..................................................
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)